விட்டன. இரண்டாம் நிலை வேலையும் நீர் தேக்கிவைக்கும் ரிசர்வாயர் வேலையும் முடிவுறும் நிலையில் உள்ளன. ஆகவே இந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற அரசு ஆவன செய்யும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் திட்டத்திற்காக அதிகமான பணம் செலவழிக்கப்பட்டாலும் பல குறைபாடுகள் இடையிலே வந்தன என்று பல குழுக்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன. அந்தக் குறைபாடுகள் இல்லாமல் இந்த ஆண்டு பார்த்துக் கொள்ள ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் முன்பு சொன்னேன்.

* 476. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கு இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை மாயூரம் குடிநீர் வழங்கு திட்டத்திற்காக 20.13 லட்ச ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே மாயூரம் நகரத்தில் குடி நீர் வழங்கும் திட்டத்தில் முதல் கட்ட வேலை பூர்த்தியாகியுள்ளது. அதில் முக்கிய மாக நகரிலுள்ள மாப்படுகை, திரு இந்தளூர், சேந்தன்குடி பகுதிகளுக்கு இத் திட்டத்தில் இடம் இல்லை என்ற காரணத்தினால் அவைகளையும் சேர்த்துக் கொள்ளக் கோரி அரசுக்கு மாயூரம் நகராட்சி தீர்மானம் போட்டுக் கேட்டுக் கொண்டுள்ளது. அதை அரசு பரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பரிசீலனை செய்து நீர்நிலைக்கு எற்ற வாறு முடிவு எடுக்கும்.

அரசு மருத்துவ மனைகள்

* 477 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளித்தலையிலுள்ள அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

1972 மார்ச் 14]

(இ) தேவையான நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது இந்த மருத்துவமனை இருக்கிற இடம் நகரத்தின் நடுப் பகுதியிலும், இடவசதியில்லாமலும், சுகாதார வசதியற்ற சூழ்நிலையிலும் இருக்கிற காரணத்தினால் கையகப்படுத்துகிற நிலத்தை விரைவாகவும் கட்டடம் எழுப்பும் பணியை இன்னும் சற்று துரிதமாகவும் செய்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படிப்பட்ட நிலை அங்கு இருப்பதினால் தான் நாலே முக்கால் ஏக்கர் அளவிற்கு நிலம் வைகைநல்லூர் என்ற குளித்தலையை யொட்டியிருக்கும் கிராமத்தில் எடுத்துக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 58,596 நிலத்திற்கு விலை வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கைகள் முடிந்த பிறகு மருத்துவமனை அங்கு கட்டுவதுபற்றிய பிற நடவடிக்கைகள் தொடரும்.

* 478 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பஞ்சப்பட்டியில் உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விரிவு செய்ய அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூடிய சீக்கிரம் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த மருத்துவமனையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது? எவ்வளவு படுக்கை வசதிகள் இருக்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பஞ்சப்பட்டியில் பத்து படுக்கைகள் அமைக்க ஒரு லட்சம் ரூபாய் கட்டடத்திற்காகவும் பிற ஏற்பாடுகளுக்காகவும் வழங்கப்பட்டிருக்கிறது.